# பாலி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2010

**1. நிதிக் கூற்றுக்கள்**

---------------------------

**1.1 அபிப்பிராயம்**

-------------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய பாலி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின் படிப்பு நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி பாலி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்ராயப்படுகின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

-----------------------------------------------------------------

**1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

------------------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

நிதிக் கூற்றுக்களில் இருப்புக்களின் பெறுமதியென பௌதீக ரீதியில் மெய்மையாய்வு செய்யப்பட்ட பெறுமதியினையே காட்ட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 488,395 ஆன களஞ்சிய முற்பணக் கணக்கின் மீதி எஞ்சிய இருப்பின் பெறுமதியெனக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------

**பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது**

அ. நிதிக்கூற்றுக்கள் மீதான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட ரூபா.1,040,248 மொத்தமான கணக்கீட்டுக் குறைபாடுகள் 2011 மார்ச் 23 ஆந் திகதிய வரைபு அறிக்கையின் மூலம் நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கெண்டுவரப்பட்டது. அவற்றில் ரூபா 830,432 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகள் திருத்தப்பட்டு திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2011 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. திருத்தப்படாத ரூபா 209,816 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகள் காணப்பட்டதுடன் அவ்வாறான குறைபாடுகள் இன்னும் இருப்பதற்கான சாத்தியத்தினை கணக்காய்வில் நிராகரிக்க முடியாதுள்ளது.

ஆ. மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட பிரசுர இருப்புக்களைக் காட்டிலும் 11 பிரசுரங்களிற்குரிய 479 புத்தகங்களை அதிகமாகவும் ஒரு பிரசுரத்திற்குரிய 162 புத்தகங்களைக் குறைவாகவும் கொண்டு நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் பிரசுர இருப்புக்களின் பெறுமதி கணிக்கப்பட்டு இருந்தமையால் பிரசுர இருப்புக்கிள் பெறுமதி ரூபா 114,101 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

-------------------------------------------------------

மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள இடர் கடன் மற்றும் வாகனக் கடன் கணக்கு மீதிகளிற்கும் பட்டோலைகளிற்கும் இடையில் முறையே ரூபா 8,586 மற்றும் ரூபா 846 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 1.2.4 பெறவேண்டிய கணக்குகள்

------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

அ. மொத்தமாக ரூபா 61,743 ஆன 05 கடன் முற்பண மீதிகள் நீண்டகாலமாக தொடர்ந்தும் அறவிடப்பாத நிலையில் காணப்பட்டன.

ஆ. ரூபா 17,540 ஆன கடன்பட்டோர் மீதியொன்று பல வருடங்களாக தீர்க்கப்படாது முற்கொண்டு வரப்பட்டிருந்தது.

## 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இனங்கி ஒழுகாமை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் (நி.பி) | |
| (i) நி.பி 757 | மீளாய்வாண்டுக்கான சொத்துக்கள் வருடாந்த மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 1645 | நிறுவனத்திற்குச் சொந்தமான இரண்டு வாகனங்களுக்கு சம்பவக் குறிப்பேடுகள் பெணிவரப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நி.பி 1646 | நிறுவனத்திற்குச் சொந்தமான இரண்டு வாகனங்களுக்குரிய மாதாந்தப் பொழிப்புக்கள் உரிய படிவத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் XXVII ஆம் அத்தியாயத்தின் 9.1 ஆம் பிரிவு | பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட மாதிரிகளில் 2182 கி.மீ. பயண தூரம் கொண்ட 25 சந்தர்ப்பங்களின் போது வாகனத்தினை உபயோகித்த உத்தியோகத்தர் தனது சுருக்க கையொப்பத்தினையிட்டு உறுதிப்படுத்தியிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) 2006 மார்ச் 01 ஆந் திகதிய 09ஆம் இலக்க பெறுகைகள் வழிகாட்டல்கள் கையேட்டின் 04 ஆம் அத்தியாயம் | பெறுகைகள் திட்டமொன்றைத் தயாரிக்காது நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகள், அலுவலக உபகரணங்கள், சுத்தீகரிப்பு மற்றும் பாதுகாப்புச் சேவைகளுக்காக ரூபா 688,685 செலவொன்று செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை. | ரூபா 4,607,448 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பில் முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தின் 1994 ஜுன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக நிறுவகத்தின் பதவியணிக்கு மொழித்திறன் படியாக மீளாய்வாண்டில் ரூபா 36,960 செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

### 2.1.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா.4,758,051 பற்றாக்குறையானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா. 6,718,878 ஆகும். மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் செலவினங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா. 7,900,000 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுத்த பின்னர் அப்பற்றாக்குறை ரூபா. 3,141,949 மிகையாகியிருந்தது. கடந்த ஆண்டின் மீண்டெழும் செலவினங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா.6,000,000 மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா.718,878 வரை குறைவடைந்திருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

### 2.2.1 செயலாற்றல்

--------------------------

**கல்விசார் செயலாற்றல்**

----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

அ. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒட்டுமொத்த மாணவர் பதிவில் அதிகரிப்பொன்றைக் காண முடிந்த போதிலும் ஆங்கில மொழியில் பௌத்த கற்கைகள் முதுமானிக்கான மாணவர் பதிவு 23% ஆல் குறைவடைந்திருந்தது.

ஆ. பதிவு செய்யப்பட்ட மாணவர்களில், மீளாய்வாண்டின் போது பரீட்சைக்குத் தோற்றியிருந்த மாணவர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டினைக் காட்டிலும் 45% ஆல் குறைவடைந்திருந்தது.

இ. மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் இது வரை வெளியிடப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெறுபேறுகளை வெளியிடுவது தாமதமடைந்திருந்தது.

### 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

----------------------------------------------

பாலி மற்றும் பௌத்த பட்டப்பின் படிப்பு நிறுவகம் ஆரம்பம் முதல் இன்று வரையான 35 ஆண்டுகளின் போது வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடமொன்றிலேயே இயங்கிவந்திருந்ததுடன் அதற்கான கட்டிட வாடகையாக வருடமொன்றிற்கு ஏறத்தாழ ரூபா 4.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. தற்போது கொழும்பிற்கு வெளியே அமைந்துள்ள கட்டிடமொன்றுக்காக ஆண்டுதோரும் ரூபா 4.5 மில்லியன் செலுத்தப்படுவதுடன் நிறுவகத்திற்கென சொந்தமாக கட்டிடமொன்றை அமைத்துக் கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 நிதியங்களின் குறைப் பாவனை**

---------------------------------------------

வெளிநாட்டுப் புலமைப்பரிசில் கொடுப்பனவு மற்றும் ஆராய்ச்சிக் கொடுப்பனவுகளாக நீண்ட காலத்திற்கு முன்னர் நன்கொடையாக கிடைக்கப்பெற்று வங்கியிலிடப்பட்டிருந்த தொகைகள் மீளாய்வாண்டின் இறுதியில் முறையே ரூபா 658,629 மற்றும் ரூபா 107,235 ஆக காணப்பட்டதுடன் குறித்த பணிகளிற்காக பயன்படுத்திக் கொள்ளப்படாது கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருந்தன.

**2.2.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

--------------------------------

மீளாய்வாண்டின் பாதிடப்பட்டவைகளுக்கும் உண்மையான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

--------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஆ) வாகனப் பாவனை

(இ) நிலையான சொத்துக்கள்

(ஈ) பிரசுர இருப்புக்கள்